1970 ஏப்ரல் 2]

தொடர்ந்து செய்வோம் என்று பொறுப்பில் உள்ளவர்களே சென்று திறந்து வைத்தார்கள் என்பது உண்மைதானா? அது நியாயம்தானா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒருவர் எதிர்த்தாலும் கைவிடவேண்டும் என்பதில்லை. பெரும்பான்மையோர் சிறுபான்மையோருடைய கருத்துக்கும் அன்பு இருந்தால் இணங்கி வருவார்கள். அன்பு வடிவத்தில் இல்லாமல் வீம்பு வடிவத்தில் இருந்தால் அதையே நிலைநாட்ட வேண்டியது அவசியமாகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : அரசியல் மரியாதை, கண்ணியம் ஆகியவை இன்றி பேசுகின்ற நண்பர்களுடைய வாய் சீல் வைக்கப்படுமா?

THIRU K. VINAYAKAM : I move that the question may be deleted or expunged from the proceedings. It should not find a place. At that rate, I can also criticise.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'ஐ மூவ்' என்று சொல்வதற்கே தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் சொல்லவேண்டும்.

THIRU K. VINAYAKAM : With your permission only I move it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைகேடைப்பற்றிச் சொல்லும்போது என் அனுமதியைப்பெற்றே with your permission only என்று முறையோடு சொல்ல வேண்டும்.

திரு. கே. விநாயகம் : எழுந்திருப்பதே with your permission தான்.

நக்ஸல்பாரி-இடதுசாரி கம்யூனிஸ்டுகள் மோதல்

* 638 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பனங்குடி கிராமத்தில் நக்ஸல்பாரி கம்யூனிஸ்ட்டுகளுக்கும், இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்குமிடையே 1969 மே திங்கள், மூன்றாவது வாரத்தில் மோதல் ஏற்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) (தீவிரப்) பொதுவுடமைக் கட்சியின் தலைவர் (மார்க்சிஸ்ட்) பொதுவுடமைக் கட்சி உறுப்பினர்களைத் தீவிர பொதுவுடைமையாளர்களுடன் சேர்ந்துகொள்ளுமாறு தூண்டினார்.

இது, இரண்டு பிரிவினரிடையேயும் கசப்புணர்ச்சியை உருவாக்கியது. இதன் விளைவாக, 14—5—69-ல் பொதுவுடைமைக் கட்சியினர் சிலர், மார்க்சிஸ்ட் பொதுவுடமைக் கட்சியினருடன் தகராறை வைத்துக்கொண்டனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்படிப்பட்ட தகராறு செய்தவர்கள் மீது வழக்கு தொடரப்படுமா ? இந்த இரண்டு கோஷ்டிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் யாராவது இறந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யாரும் இதில் இறந்துவிடவில்லை. உத்தண்டி என்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக்கு சிறு காயம் ஏற்பட்டிருக்கிறது. நன்னிலம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கும் பதியப்பட்டு பட்டியலில் இருந்த 8 பேர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டது. குற்றவாளிகள் அந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

திரு. என். வரதராஜன் : நக்சல்பாரிகளைப் பற்றித் தொடர்ந்து பல கேள்விகள் வருகின்றன. இது அவர்களை ஊக்குவிப்பதற்காகவே அனுப்பி வைக்கிறார்களோ என்கிற சந்தேகம் ஏற்படுவதற்கு ஆதாரம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களுடைய நடவடிக்கைகளை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ யாரும் ஊக்கப்படுத்தமாட்டார்கள் என்றே நான் நம்புகிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : நக்சல்பாரிகளா ? நக்கல் பாரிகளா ? அந்தச் சொல்லுக்கு என்ன பொருள் ?

(விடை இல்லை.)

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : பனங்குடி நக்சல்பாரிகள் இப்போது வலதுசாரி கட்சியில் சேர்ந்துவிட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த விவரங்களை நான் கவனித்துக் கொண்டிருப்பது இல்லை.

திரு. ஆ. மாரிமுத்து : தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஏதாவது அசம்பாவிதம் நடந்துவருவதைக் கவனித்து இனி மேலாவது நடைபெறுமல் இருக்க இந்த அரசு அக்கறை காட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அசம்பாவிதம் எந்தத் தரப்பில் இருந்தும் நடக்கக்கூடாது என்பதில் இந்த அரசு அக்கறையாக இருக்கிறது.

திரு. ஏ. ஆர். பெருமாள் : பெண்ணாடம் பகுதியில் நக்சல்பாரிகள் நடமாட்டம் அதிகம், அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள்

1970 ஏப்ரல் 2]

கூட அதில் இருக்கிறார்கள் என்பது உண்மையா? அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பகுதியிலேயே இவர்கள் இருப்பதாகக் கூறுவதும் உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்பகுதியில் வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்ட தகவல் வந்திருக்கிறது. வெடிகுண்டு வெடித்ததில் இறந்துபோனவர்களுடைய உடல் புதைக்கப்பட்டதும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மேலும் புலன் விசாரணை தீவிரமாக நடந்து வருகிறது.

திரு. மு. ச. சிவசாமி: நக்சல்பாரிகள் பொதுக்கூட்டத்தில் பேசும்போது போலித் துப்பாக்கியை வெடித்துக் காட்டி இதேமாதிரி அரசியல் தலைவர்களைச் சுட்டுத் தள்ளுவோம் என்று பேசுகிறார்களே, அதன்மீது இனியாவது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட குறிப்பிட்ட தகவல் அரசுக்கு வருமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, some time back the Hon. Chief Minister said that Naxalbari volunteers were going to North India to get trained in Naxalbari activities. The Central Government has denied it. May I request whether any correspondence passed between the Central Government and the State Government in this regard?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் சமீப காலத்தில் நக்சல்பாரிகள் வடமாநிலத்திற்குப் பயிற்சிபெறுவதற்காகப் போயிருக்கிறார்கள் என்கிற எந்தத் தகவலும் தரவில்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: நக்சல்பாரி என்ற சொல் கிராமத்தின் பெயரா? கட்சியின் பெயரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் முதலில் தோன்றிய இடத்தின் பெயர்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி: தஞ்சை மாவட்டத்தில் போலீஸ் தீவிர நடவடிக்கையின் பொருட்டு இந்த நக்சல்பாரி களுடைய நடவடிக்கை சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்திருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தங்களுக்குத் தெரிந்ததே சர்க்காருக்குத் தெரிந்ததாக அர்த்தம்.